**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.232/2013 P.W.4 /L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சிந்தாமணி (சிறப்பு உதவி ஆய்வாளர்) (ஓய்வு) | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 28.02.2024.**

**அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் இன்று ஆஜரில்லை என்பதால் சாட்சியை வழக்கின் தன்மைக் கருதியும் நீதியின் நலன் கருதியும் நிலையப்பொறுப்பு அதிகாரியின் முன்னிலையில் பதிவுச் செய்யப்படுகிறது.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**1.** நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 10.05.2012 ம் தேதி நான் குளச்சல் காவல்நிலைய, நிலைய பொறுப்பில் இருக்கும் போது, அரசு மருத்துவகல்லூரி ஆசாரிபள்ளம் புற காவல்நிலையத்திலிருந்து, வந்த தகவலின்படி, 12.30 மணிக்கு மேற்படி புகார் காவல்நிலையத்திற்கு சென்று மரிய செல்வம், க/பெ. பொன்னையன், ஆலஞ்சி என்பவருடைய intimation ஐ பெற்று மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மரிய செல்வத்தை பார்க்க அவருக்கு எழுத, படிக்க தெரியாத காரணத்தினால், அவருடைய மகள் லீமா றோஸ், வயது 31 த/பெ. பொன்னையன், மேற்படி லீமாறோஸ் எழுத்து மூலமாக கொடுத்த புகார் மனுவை13.00 மணிக்கு பெற்று, 14.00 மணிக்கு குளச்சல் காவல்நிலைய குற்ற எண்.196/2012 பிரிவு 323, 294 பி, 506 பத்தி ஒன்று இ.த.ச.1860 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி, **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி, வழக்கு சம்மந்தமாக என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் .**

முதல் தகவல் அறிக்கையில், நேரத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 16 வது இனத்தில் புகார்தாரரிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால், சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.